# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண். 396/2012

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சம்பத்குமார் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. சிதம்பரம் | தொழில் | .. கூலி |
| வயது | .. 61 | ஜாதி | .. செங்குந்தமுதலியார் |
| கிராமம் | .. அல்லிக்குட்டை | நாள் | .. 25.02.2021 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

வா.சா.1 – சம்பத்குமார் - குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

வழக்கு சொத்து ஆதியில் வள்ளி இடும்ப முதலியாருக்கு பாத்தியப்பட்டது என வழக்குரை பத்தி எண்.3 இல் சொல்லியிருக்கிறேன் என்றால், ஆமாம். இதே சங்கதிகளை எனது பிரமாணப்பத்திரிக்கையில் 2 வது பத்தியிலும் சொல்லியிருக்கிறேன் என்றால், சரிதான். வள்ளி இடும்ப முதலியாருக்கு இரண்டு மனைவிகள் என்றால், சரிதான். முதல் மனைவியின் பெயர் என்ன ரங்கநாயகி (எ) ரங்கம்மாள், இரண்டாவது மனைவியின் பெயர் அத்தாயிஅம்மாள். முதல் மனைவிக்கு எத்தனை பேர் வாரிசு தாரர்கள் என்றால், சின்னப்பன் என்ற ஆண் வாரிசின் பெயர் மட்டும்தான் தெரியும், ஒரு பெண் மகள் உள்ளார், அவரின் பெயர் எனக்குத் தெரியாது. இரண்டாவது மனைவிக்கு எத்தனை குழந்தைகள் என்றால், இரண்டு ஆண்மக்கள், ஆறு பெண் மக்கள். அவர்கள் முறையே 1. சிதம்பர முதலியார், 2. சாமிநாதன், 3. பெரியம்மாள், 4. அமராவதி அம்மாள், 5. பூங்காவனம், 6. சொக்கம்மாள், 7. சம்பூரணம்மாள், 8. கந்தாயம்மாள் ஆகியோர் ஆவார்கள். எனது குடும்பத்தில் எனது தாத்தா மற்றும் எனது தகப்பனார் இரண்டு மனைவிகளை திருமணம் செய்துள்ளார்கள் என்றால், சரிதான். இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி முதல் மனைவியின் வாரிசுதாரர்களுக்கும் பங்குள்ளது என்று சொன்னால், சரிதான். நான் எனது தகப்பனாரின் இரண்டாவது மனைவியின் மகனா என்றால், ஆமாம். முதல் மனைவியின் வாரிசுதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால், சரிதான். வள்ளி இடும்ப முதலியாருக்கு இரண்டு மனைவிகள் என்ற விபரத்தையோ, அவர்களில் முதல் மனைவியின் வாரிசுதாரர்கள் யார் யார் என்ற விபரத்தையும், இரண்டாவது மனைவியின் பெண் வாரிசுதாரர்கள் பற்றிய விபரங்களையும் நான் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால், சரிதான். அதேபோல் இந்த வழக்கில் எனது தாத்தாவின் முதல் மனைவியின்

வாரிசுதாரரையும், இரண்டாவது மனைவியின் பெண் மக்களையும் இந்த வழக்கில் நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். இடும்ப முதலியாரின் மனைவிகள் யார் யார் என்பதையோ, அவரின் வாரிசுதாரர்கள் யார் யார் என்பதையோ காட்டுவற்கு வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அதேபோல், எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இறந்துபோன வள்ளி இடும்ப முதலியாரின் வாரிசு பட்டியலையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வள்ளி இடும்ப முதலியாரின் அனைத்து வாரிசுதாரர்களையும் பாகப்பிரிவினை வழக்கான இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்ற காரணத்திற்காகவே இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல, அவர்களுக்கும் தாவா சொத்திற்கு இணையான அளவு நிலத்தை ஏற்கனவே கொடுததுவிட்டார்கள். அவர்களுக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை, ஆனால் அவர்கள் எங்களது பக்கத்து வீட்டில்தான் குடியிருக்கிறார்கள். வள்ளி இடும்ப முதலியாரின் இதர வாரிசுதாரர்கள் யார் யாருக்கு எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால், முடியாது. எனக்கு பாகப்பிரிவினை பற்றி நேரில் தெரியுமா என்றால், தெரியாது. மற்ற வாரிசுதாரர்களுக்கு எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள நிலத்தை ஏற்கனவே கொடுத்துவிட்டார்கள் என்ற விபரத்தை எனது வழக்குரையில் சொல்லாமல் முதன்முதலாக தற்போதுதான் சாட்சியத்தில் சொல்கிறேன் என்றால், சரிதான். இந்த வழக்கு சொத்தை தவிர எங்களுக்கு வேறு நிலம் இல்லை, அதை அவர்களுக்கு கொடுக்கவும் இல்லை, ஆனால் தற்போது இந்த வழக்கிற்காக வேறு நிலம் இருப்பதாகவும், அதனை மேற்கண்ட நபர்களுக்கு கொடுத்துவிட்டதாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / சம்பத்குமார்

ஒப்பம் / திருமதி. மு.பாக்கியம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.